பக்கங்கள் 16+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | தை 12 சனிக்கிழமை 25.01.2025 | அதிர்வு 177

## 31ஆம் திகதி முதல் தபால் ரயில் சேவை

ஜனவரி 31ஆம் திகதி முதல் கொழும்புக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் இரவு நேர தபால் ரயில் தினசரி சேவையில் ஈடுபடும் எனத் தகவல் வெளியாகியுள்ளது. 04

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# சி.வி.கேயுடன் கஜேந்திரகுமார் இன்று நேரில் சந்தித்துப் பேச்சு



(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. இன்று மாலை 5 மணிக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தை அவரது நல்லூர் இல்லத்திற்குச் சென்று சந்திக்கிறார்.

புதிய அரசமைப்பு உருவாக்க விடயத்தில் தமிழ் தேசிய கட்சிகள் இடையே இணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியாக பல கட்சிகளையும் ஒன்றிணைத்துப் பேசும் நடவடிக்கைகளை கஜேந்திரகுமார் முன்னெடுத்து 04



# பணமோசடித் தடுப்புச் சட்டத்தின் கீழ் யோஷித ராஜபக்ஷ திடீரெனக் கைது

## அவரைக் குடைகின்றனர் சி.ஐ.டியினர்



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது மகன் யோஷித ராஜபக்ஷ இன்று காலை திடீரெனக் கைது செய்யப்பட்டார். அவர் தற்போது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைத்து வரப்பட்டுள்ளார். குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அவரிடம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. 04

### மருந்து இறக்குமதி ஊழல் தொடர்பில்

# ரணில், தினேஷ் இருவரையும் அழைத்து வாக்குமூலம் பெற சி.ஐ.டியினர் முடிவு!

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விரைவில் அழைத்து வாக்குமூலம் பெறவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.



கடந்த அரசாங்கத்தின் கீழ் மருந்து இறக்குமதியின் போது பாரிய ஊழல்கள் இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக – குறிப்பாக முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவை சம்பந்தப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட விரிவான விசாரணையின் ஒரு பகுதியாக – இந்த நடவடிக்கை 04





# மன்னார் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் கைதான 5 சந்தேக நபர்களும் புதன் வரை விளக்கமறியலில்

(மன்னார் நிருபர்)

மன்னார் நீதிமன்றத்தின் முன் கடந்த 16 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட 5 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மன்னார் நீதிமன்றத்தின் முன் இடம்பெற்ற இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் வழக்கு விசாரணைக்காக வருகை தந்த இருவர் உயிரிழந்தமையுடன்,பெண் ஒருவர் உள்ளடங்கலாக மேலும் இருவர் படுகாயம் அடைந்தனர்.

இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வந்த பொலிஸார் சம்பவத்துடன் நேரடியாக தொடர்பு பட்டவர்கள் கைது செய்திருந்தனர். நேற்று முன்தினம் வியாழக்கிழமை மேலும் ஒரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

மன்னாரைச் சேர்ந்த கடற்தொழிலாளர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தக் கடற் தொழிலாளி கொலைச் சம்பவத்திற்கு உதவி ஒத்தாசை வழங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை குறித்த சம்பவத்தின் பிரதான சந்தேக நபர்கள் அனைவரும் இராணுவத்துடன் தொடர்பு பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# நன்னடத்தை இல்லத்தை சேர்ந்த 10 வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முற்பட்டவர் சிக்கினார்



(கனகராசா சரவணன்)

ஏறாவூரில் சிறுவர் நன்னடத்தை இல்லம் ஒன்றில் பராமரிப்பில் இருந்து வந்த 10 வயது சிறுமி நேற்றுத் தனது பாடசாலைச் சிநேகிதியைத் தேடி அவரின் வீட்டுக்குச் சென்றபோது, சிநேகிதியின் தந்தையாரான 37 வயது நபர் அந்தச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முற்பட்டார் எனக் கூறப்படுகின்றது.

அந்த நபரை நேற்று வெள்ளிக்கிழமை இரவு கைது செய்துள்ளமையுடன் சிறுமியை வைத்தியசாலையில் தாங்கள் சேர்த்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை மாவட்டதிலுள்ள பிரதேசம் ஒன்றைச் சேர்ந்த 10 வயது சிறுமியின் தாய், தந்தை சிறுமியை விட்டுவிட்டு வெவ்வேறு திருமணங்கள் செய்தமையை அடுத்து, கைவிடப்பட்ட சிறுமியை பிரதேச சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் அவரைப் பராமரிக்க சிறுவர் நன்னடத்தை இல்லத்தில் ஒப்படைத்தனர்.

இதனடிப்படையில் ஏறாவூரிலுள்ள சிறுவர் நன்னநடத்தை இல்லம் ஒன்றில் பராமரிக்கப்பட்டுவந்த சிறுமி நேற்று அருகிலுள்ள பாடசாலைக்குச் சென்றுள்ளார். பாடசாலை முடிந்தும் பகல் 2.00 மணியாகியும் மீண்டும் இல்லத்துக்கு அவர் திரும்பவில்லை. அதையடுத்து நன்னடத்தை உத்தியோகத்தர்கள் அவரைத் தேடிப் பாடசாலைக்கு சென்றபோது அவர் அங்கிருந்து காணாமல் போயிருந்தமை தெரிய வந்தது.

இதனையடுத்து அவரை அந்த பகுதியில் தேடிவந்த நிலையில் அவர் அவரது நண்பியின் வீட்டுக்கு சென்றுள்ளர் என கண்டறிந்த உத்தியோகத்தர்கள் அங்கு சென்றனர். அங்கு சிறுமியின் நண்பி அவரது தாயார் வீட்டில் இருந்து வெளியே சென்றிள்ளார் எனக் கூறப்பட்டது. வீட்டில் தனிமையில் இருந்த அவரது தந்தையார் சிறுமியை வீட்டினுள் கூட்டிச் சென்று அவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முற்பட்டார் என்றும் அந்த நிலையில் சிறுமி அங்கிருந்து மீட்கப்பட்டார் என்றும் கூறப்பட்டது.

இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நண்பியின் தந்தையாரான கூலி தொழிலாளி கைது செய்யப்பட்டார். சிறுமி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

கைது செய்தவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸ் நிலைய சிறுவர் பெண்கள் பிரிவினர் மேற்கொண்டுவருகின்றனர்.






# நல்லூர் இளங் கலைஞர் மன்றத்தின் புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டது

புனரமைக்கப்பட்ட நல்லூர் இளங் கலைஞர் மன்றத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா இன்று காலை இடம் பெற்றது.

இளங்கலை மன்றத் தலைவரும் வடக்கு மாகாண அவைத்தலைவரு மான சி.வி.கே.சிவஞானம் தலைமை யில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இளங்கலைஞர் மன்றத்திற்கு அருகிலுள்ள கொண்டலடி ஞான வைரவர் ஆலயத்தில் இடம் பெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து நிகழ்வு ஆரம்பமானது.

இவ் விழாவின் பிரதம அதிதியாக கலந்து கொண்ட வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் புதிய கட்டடத் தொகுதியைத் திறந்து வைத்தார்.

கௌரவ விருந்தினர்களாக சிவ பூமி அறக்கட்டளை தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன், இசைவானர் மு.கண் ணன் உட்பட பலரும் கலந்து கொண்டி ருந்தனர்.

நிகழ்வில் ஈழத்தின் புகழ்பூத்த தவில், நாதஸ்வரக் கலைஞர்களின் விசேட நாதஸ்வர தவில் கச்சேரியும் இடம்பெற்றது.






















# யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் தொடரும் உண்ணாவிரதப் போராட்டம்

மாணவர்கள் மீதான பழிவாங்குதல்களை உடன் நிறுத்துமாறு வலியுறுத்தி பல்கலைக்கழக முன்றிலில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்துள்ள உணவுத் தவிர்ப்பு போராட்டம் இரண்டாவது நாளாக இன்றும் தொடர்கின்றது.

மாணவர்கள் 09 பேருக்கு விதிக்கப்பட்டுள்ள வகுப்புத் தடைகளை நீக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் நேற்று முதல் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாணவர்கள் பின்வரும் நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்னிறுத்தியுள்ளனர்:-

1. விதிகளுக்குப் புறம்பாக நடைபெறும், நடைபெற்ற மாணவர்கள் மீதான விசாரணைகளை உடன் நிறுத்து!

2. "போராடுதல், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் உள்ளிட்ட மாணவர்களின் அடிப்படை உரிமைகளை உறுதி செய்!"

3. "விரிவுரையாளர்கள் மீதான முறைகேடுகளையும் பாரபட்சமின்றி விசாரணை செய்!"

4. "மாணவர்களின் கற்றலுக்கான சுதந்திரத்தை உறுதி செய்து மாணவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கு!"

- இந்தக் கோரிக்கைகளை முன்வைத்து தீர்வு கிடைக்கும் வரை உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் மாணவர்கள் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### 31ஆம் திகதி...

இந்த விடயத்தை ரயில்வேத் திணைக்கள பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

### ரணில், தினேஷ்...

எடுக்கப்படவிருக்கின்றது.

இந்த முறைகேடுகளுக்கான கூட்டுப் பொறுப்பை மையமாக வைத்து அப்போதைய அமைச்சரவை உறுப்பினர்களிடமிருந்து வாக்குமூலங்களைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி மற்றும் பிரதமரின் இல்லங்களுக்குச் சென்று வாக்குமூலங்களைப் பதிவு செய்ய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் திட்டமிட்டுள்ளனர் என் சில ஊடகங்களில் முன்னரே செய்திகள் வெளியாகியிருந்தன.

இதற்கிடையில், மருந்து ஊழல் வழக்கு தொடர்பாக ஏற்கனவே பல முன்னாள் அமைச்சரவை அமைச்சர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. இந்த செயல்முறையை முடிக்க முந்தைய அமைச்சரவையில் இருந்த மீதமுள்ள அமைச்சர்களும் வரும் நாள்களில் வாக்குமூலம் அளிக்க அழைக்கப்படுவார்கள் என்றும் கூறப்பட்டது.

### சீ.வி,கேயுடன்...

வருகிறார் என்பது தெரிந்ததே.

அந்த நடவடிக்கையின் ஒரு கட்டமாக இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு அழைப்பு கொடுப்பதற்காக அவர் சி.வி.கே.சிவஞானத்தை சந்திக்கிறார் எனக் கூறப்படுகின்றது.

இன்று பிற்பகலில் தொலைபேசி மூலம் சிவஞானத்துடன் தொடர்பு கொண்டு பேசிய பின்னர் அவரை சந்திப்பதற்கு கஜேந்திரகுமார் செல்கின்றார் என அறிய வந்தது.

ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு நடத்துவதற்காக தமிழரசுக் கட்சி ஏழு பேர் கொண்ட குழு ஒன்றை நியமித்திருப்பது குறிப்பிடத்தக்கது. அந்தக் குழுவுடன் ஆலோசித்த பின்னர் கஜேந்திரகுமார் விடுக்கும் அழைப்பை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பில் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சிவஞானம் முடிவு செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

### பணமோசடி...

இரத்மலானை, சிறிமல் பிரதேசத்தில் அமைந்துள்ள 34 மில்லியன் ரூபா மதிப்புள்ள வீடு மற்றும் காணியை வாங்கியமை தொடர்பில் இடம்பெற்ற மோசடியில் யோஷித ராஜபக்ஷவை சந்தேகநபராகப் பெயரிடப் போதுமான ஆதாரங்கள் இருப்பதாக புலனாய்வுத் திணைக்களத்துக்கு சட்டமா அதிபர் அறிவுறுத்தியமையை அடுத்தே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது எனக் கூறப்பட்டது.

யோஷித ராஜபக்ஷ இன்று அதிகாலை தெற்கு நெடுஞ்சாலையில் பெலியத்த வெளியேறும் பகுதியில் வைத்து குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் வாக்குமூலத்தைப் பதிவு செய்த பின்னர் இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் சி.ஐ.டியினர் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.



# யாழ். சர்வதேச சட்ட மாநாடு இன்று பல்கலையில் ஆரம்பம்

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சட்டத்துறையின் ஏற்பாட்டில் வருடாந்தம் நடத்தப்படும் யாழ்ப்பாண சர்வதேச சட்ட மாநாடு இன்று (25) யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பமானது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சட்டத்துறை, இந்தியாவின் சுரானா மற்றும் சுரானா சர்வதேச வழக்கறிஞர் நிறுவனத்துடன் இணைந்து இரண்டாவது தடவையாகவும் ‘முறை செய்’ என்ற தலைப்பில் யாழ்ப்பாண சர்வதேச சட்ட மாநாட்டை நடத்துகிறது.

இந்த மாநாடானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட ஹுவர் கலையரங்கில் ஆரம்பமானது.

‘மாற்றத்திற்கான கருவியாக சட்டம்’ என்னும் சாரப்பட செயற்படல், நிலைமாற்றம், நிலைத்திருப்பு என்னும் தொனிப்பொருளில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இவ்வருட மாநாட்டின் முதல் நாள் நிகழ்வில் உயர்நீதிமன்ற நீதியரசர் ப்ரீத்தி பத்மன் சூரசேன பிரதம விருந்தினராகவும், தகவல் உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர்களில் ஒருவரான ஹிஷாலீ பின்டோ ஜெயவர்த்தன சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து ஸ்ரீசற்குணராஜா, யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரகுராம், யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதர் சாய் முரளி, யாழ். ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், நீதிபதிகள், நீதிவான்கள், சட்டத்துறை சார் நிபுணர்கள், சட்டத்தரணிகள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.











# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## யாரிடமிருந்து பாதுகாப்பு?

தமக்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறைக்கப்பட்டமை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்து முறையிட்டிருக்கின்றார்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு நாடு வழங்கும் வசதிகள், வாய்ப்புகள், சிறப்புரிமைகள், வரப்பிரசாதங்கள், அவற்றுக்காகச் செலவிடும் அரச நிதி போன்ற விடயங்கள் அண்மைக் காலத்தில் விவாதப் பொருளாகி சூடு பிடித்திருக்கின்றன.

கடந்த வருட இறுதியில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் ஆகியவற்றின் போதும், அதன் பின்னரும், இப்போதும், இந்த விவகாரம் பலத்த வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தி நிற்கின்றன்.

இந்த விவகாரம் இப்போது உயர் நீதிமன்றத்திற்குப் போய் இருப்பதால் அதையொட்டிய விடயங்களை நேரடியாக அக்கு வேறு ஆணி வேறாகப் பொது வெளியில் - ஊடகங்களில் - பிய்த்துப் பிதறிப் பிரித்து ஆராய்வது சட்டப் பொருத்தமற்றது.

ஆயினும், முன்னாள் ஜனாதிபதிகளுக்கான பாதுகாப்பு பற்றிய விடயம் ஒரு நாட்டுக்கு மிகுந்த சிரத்தை உள்ள விவகாரம்தான்.

அதே சமயம் ஐந்து முன்னாள் ஜனாதிபதிகள், ஒரு முன்னாள் ஜனாதிபதியின் துணைவியார் என அரை டசின் பேரின் பாதுகாப்புக் குறித்து அவர்களுக்கான அரச் செலவினங்கள் குறித்து - பேசுவது முறையற்றதாகாது.

அவர்களுக்கு வழங்க வேண்டிய வசிப்பிடம். மற்றும் வசதிகள் தொடர்பாக அரசமைப்பில் - சட்டங்களில் - விசேடமாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. பாதுகாப்பு போன்ற காரணங்களுக்கு அல்லாமல் பிற அர்த்தமற்ற விடயங்களுக்காக அந்தச் சட்ட விதிகள் மீறப்பட்டிருப்பின் அவை தவறான செயற்பாடுகள்.

முன்னாள் ஜனாதிபதிகளின் வதிவிட இல்லங்கள் தொடர்பாக தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவிக்கும் கருத்துக்கள் பெரும்பாலும் இந்த நிதி ஒதுக்கீடுகள் பற்றிய சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் அமைந்தவை.

ஆயினும் அவை சட்ட - நிதிச் செலவின - அடிப்படையில் மட்டும் பார்க்கப்படுவனவாக இருக்க முடியாது. அதையும் தாண்டி, நாட்டின் தலைவராக இருந்த ஒருவரின் பாதுகாப்பு பற்றியதாகவும் அதன் அடிப்படையிலான பொறுப்புடன் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பை அலசி ஆராய்ந்து, அளவீடு செய்யும் பாதுகாப்புத் தரப்பினர் யுத்தம் முடிந்து பதினைந்தரை ஆண்டுகள் தாண்டி விட்ட யதார்த்தத்தையும் புறந்தள்ள முடியாது.

ஆயினும் பாதுகாப்பு ஆபத்து என்பது கட்டமைப்பு ரீதியான குழுக்களிடமிருந்துதான் வர வேண்டும் என்பது அல்ல. வெளியில் தன்னை அடையாளப்படுத்தாமல் அடங்கி இருக்கும்தனிநபர்கள்தரப்பிலிருந்தும் கூட வரலாம். அது ஒரு விடயம்.

அடுத்தது - இப்போது நாட்டை ஆட்டிப்படைப்பது தேசிய இனப் பிரச்சனையின் விளைவான யுத்தம் அல்ல என்பது.

போதை வஸ்து மற்றும் மாபியா குழுக்களைச் சேர்ந்த பாதாள உலக அணிகளின் ஆபத்துத்தான் இப்போது நாட்டை கலக்கும் விவகாரமாகும்.

அந்தப் பாதாள உலகக் குழுக்களை ஒழிப்பதில் இதுவரை காலமும் காத்திரமாக நடவடிக்கை எடுத்த பொலிஸ் அதிகாரிகள், குற்றப் புலனாய்வினர், பாதுகாப்புத் தரப்பினர், அரசியல் பிரமுகர்கள் எனப் பலர் உள்ளனர். அவர்களின் பாதுகாப்புக் குறித்துச் சிந்திக்காமல் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு மட்டும் அதீத பாதுகாப்பு வழங்குவதும் பொருத்தமற்றதுதான்.

இவை பற்றி எல்லாம் நீதிமன்றம் ஆராயும் என எதிர்பார்க்கலாம்.







# எம்.ஜி. ஆரின் 108 ஆவது பிறந்த தினத்தில் உதவிகள்

(ஹஸ்பர் ஏ.எச் )

எம்.ஜி. ஆரின் 108 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு மூதூர் கிழக்கு கடற்கரைச்சேனை வித்தியாலயத்தில் மாணவர்களுக்கான நிதியத்தின் தலைவர் கனகசபை தேவகடாட்சம் தலைமையில் உதவிகள் வழங்கப் பட்டன.

எம்.ஜி. ஆரின் ஆதரவாளரான அந்தோனியின் சொந்த நிதியில் ஐந்து லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகையில் பாடசாலை உபகரணங்கள், பாடசாலை மாணவர்களுக்கும் பாட்டாளிபுரம் பாடசாலை சம்பூர் இளக்கந்தை பாடசாலை மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் என்பனவும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.



# மியன்மார் ரோஹிங்கியா அகதிகளை திருப்பும் தீர்மானத்தை பரிசீலிக்குக!

## ஐக்கிய மக்கள் முன்னணி ஜனாதிபதிக்குக் கடிதம்

(நூருல் ஹுதா உமர்)

இலங்கையில் புகலிடம் கோரிவரும் மியன்மார் ரோஹிங்கியா அகதிகளை திருப்பி அனுப்பும் முடிவு குறித்துக் கவலை அடைவதாகவும், குறித்த தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்யுமாறு ஐக்கிய மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் எம்.ஏ.நளீர் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு அனுப்பி வைத்துள்ள அவசர கடிதத்தில் கோரியுள்ளார்.

அந்தக் கடிதத்தின் தெரிவித்துள்ளவை வருமாறு,

சர்வதேச மனிதாபிமானக் சட்டங்களையும், கொள்கைகளையும் நாம் கடைப்பிடிக்க வேண்டும். துன்புறுத்தலுக்கு ஆளாகாமல் தங்கள் தாயகத்தில் இருந்து தப்பி வந்த இவர்களின் நலனை கருத்தில் கொள்ள வேண்டும் என்பது எனது உறுதியான நம்பிக்கை.

மியான்மாரில் கடுமையான வன்முறை மற்றும் அடக்குமுறை காரணமாக ரோஹிங்கியா மக்கள் நம் நாட்டில் தஞ்சம் புகுந்துள்ளனர் என்பது உங்களுக்குத் தெரியும். அவர்கள் இலங்கைக்கு வந்திருப்பது பொருளாதார நோக்கில் புலம்பெயர்ந்தல்ல. உயிருக்குப் பயந்துதான்.

ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வதேச சமூகம் இந்த நபர்களின் அவல நிலையை அங்கீகரித்துள்ளது. மேலும் மனித உரிமைகள் மற்றும் கண்ணியத்தை மதிக்கும் ஒரு தேசமாக அவர்கள் பாதிக்கப்படக் கூடிய நேரத்தில் அவர்களுக்கு பாதுகாப்பை வழங்குவது நமது கடமையாகும்.

அகதிகள் மீதான சர்வதேச சட்டங்கள் மற்றும் மரபுகளுடன் எமது நாட்டின் நடவடிக்கைகள் ஒத்துப் போவதை உறுதி செய்ய வேண்டும். இது மறுபரிசீலனை செய்யாத கொள்கையை வலியுறுத்துகிறது. தனிநபர்கள் அவர்களின் உயிருக்கு அல்லது சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் இடங்களுக்கு அவர்களை திருப்பி அனுப்புவதைத் தடுக்கிறது. இந்தக் கோட்பாட்டை நிலை நிறுத்துவதன் மூலம், பாதிக்கப்படக் கூடிய நபர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது மட்டுமன்றி, சர்வதேச மனிதாபிமான தரங்களுக்கு இலங்கை அர்ப்பணிப்பை வெளிப்படுத்துதல் வேண்டும்.

வரலாற்று ரீதியாக, இலங்கை துன்புறுத்தலுக்கு ஆளாகியவர்களுக்கு புகலிடமாக இருந்து வருகிறது. அத்துடன் பல இலங்கையர்கள் மோதல் காலங்களில் வேறு நாடுகளில் அகதிகளாக வாழ்ந்துள்ளனர். மியன்மார் ரோஹிங்கியா அகதிகளின் தற்போதைய நிலைமை கடந்த காலத்தில் ஒரு தேசமாக நாம் எதிர்கொண்ட போராட்டங்களை பிரதிபலிக்கிறது என்பதை நினைவில் கொள்வது மிகவும் முக்கியமானது.

மியன்மாரில் அவர்களின் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் இன்னும் ஆபத்தில் உள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த மக்களை வலுக்கட்டாயமாக மியான்மாருக்குத் திருப்பி அனுப்பும் முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அகதிகள் இலங்கையில் இருக்கும் போது அவர்களை மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நடத்த வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் கைதிகளாகக் கருதப்படாமல், நமது இரக்கமும் ஆதரவும் தேவைப்படும் மக்களாகக் கருதப்பட வேண்டும். மேலும், இந்த அகதிகள் தங்களுக்குப் பாதுகாப்பானதாகக் கருதப்பட்டவுடன் அவர்களின் ஒப்புதலுடன் மீள்குடியேறக்கூடிய பொருத்தமான மூன்றாவது நாட்டை அடையாளம் காண ஐக்கிய நாடுகள் சபையுடன் ஒத்துழைப்பது பொருத்தமானதாக இருக்கும் எனக் கருதுகிறேன்.-என்றுள்ளது.

# சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிப்பதற்கான செயற்றிட்டம்!

(எஸ்.எம்.முபீன், அபு அலா)

கடந்த சில நாள்களாகத் திருகோணமலை மாவட்டத்தில் தொடராக பெய்து வந்த அடைமழை காரணமாக நிலாவெளி கடற்கரையோரங்களில் வெளிநாட்டு மற்றும் உள்ளூர் சுற்றுலாப் பயணிகளுக்காக அமைக்கப்பட்டிருந்த இளைப்பாறும் இடங்கள் சேதமடைந்து காணப்பட்டன. இதனை மாற்றியமைக்கும் "கிளீன் ஸ்ரீலங்கா" பணிகள் மற்றும் கடற்கரை ஓரங்களை துப்பரவு செய்யும் சிரமதானம் இன்று (25) முன்னெடுக்கப்பட்டது.

வெளிநாட்டு மற்றும் உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் மிக அதிகமாக விரும்பி வரும் இடமாகத் திருகோணமலை - நிலாவெளி பிரதேசம் காணப்படுகின்றது. கடந்த வருடங்களை விட இவ்வருடம் மிக அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருவதை எதிர்பார்த்து அவர்களின் வசதிகளுக்கேற்ப குறித்த பிரதேசங்களிலுள்ள இளைப்பாறும் இருக்கைகள் போட்டு மற்றும் கூடாரங்கள் போன்றவற்றை



அழகு படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடற்கரையோரங்களைச் சுத்தமான பிரதேசமாக வைத்திருக்கும் சிரமதானப் பணிகளை நிலாவெளி சுற்றுலாப் படகு சங்கத்தினர் முன்னெடுத்தனர்.

சுற்றுலாப் படகு சங்கத்தின் தலைவர் அழகையா கோபாலகிருஷ்ணன் தலைமையில் இடம்பெற்ற இப்பணியில் சங்கத்தின் உபதலைவர் எஸ்.எம்.முபீன் உள்ளிட்ட சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.


EVEREST
FURNITURE
MODERN FURNITURE
FOR YOUR HOME



(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ MIX 1C1 SCARBOROUGH, CANADA



# மருதமுனை மசூர் மௌலானா மைதானத்துக்கு மின்னொளி!

(ஏ.எல்.எம்.ஷினாஸ், நூருல் ஹுதா உமர்)

மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்துக்கு 16 மில்லியன் ரூபா செலவில் மின்னொளி பொருத்தும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த மைதானத்துக்கு நவீன மின்னொளியை பொருத்தித் தருமாறு பிரதேசத்தில் உள்ள விளையாட்டு கழகங்கள், சமூக அமைப்புக்கள், சங்கங்கள், கழகங்களின் பிரதிநிதிகள் என பலரும் நீண்ட காலமாக பிராந்திய அரசியல் தலைவர்களிடத்தில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வந்தன.

இந்நிலையில் மைதானத்திற்கு மின்னொளி பொருத்துவதற்கு என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எஸ்.எம்.எம்.முஷாரப் முதுநபீன் 2 மில்லியன் ரூபா நிதியை முதல் கட்டமாக ஒதுக்கீடு செய்திருந்தார்.

பின்னர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் 14 மில்லியன் ரூபா நிதியைக் குறித்த மைதானத்தில் மின்னொளி பொருத்தி நவீன மைதானமாக புனரமைப்பு செய்வதற்கு என்று ஒதுக்கீடு செய்திருந்தார்.

இந்த வேலைத் திட்டத்தைக் கல்முனை பிரதேச செயலகம், கல்முனை மாநகர சபை என்பன முன்னெடுத்தன. இவர்களின் அனுமதிக்கு அமைய தனியார் நிறுவனம் ஒன்றுக்குப் பொறுப்பளிக்கப்பட்டுத் தற்போது அதிநவீன மின்னொளி பொருத்தும் நடவடிக்கைகள் மைதானத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நவீன மின்கம்பங்களைக் கொண்டு நீண்ட கால பயன்பாட்டிற்கு ஏற்றாற்போல் குறித்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும் என பிரதேச விளையாட்டு கழகங்களின் பிரதிநிதிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பலரும் தமது கருத்துக்களை முன்வைத்து வந்தனர்.

# மறவன்புலோ கீரை வாய்க்கால் மதவை புனரமைக்குமாறு கமக்காரர் கோரிக்கை

(த.சுபேசன்)

கைதடி கமநலசேவை நிலைய எல்லைப் பரப்புக்கு உட்பட்ட மறவன்புலோ பகுதியில் அமைந்துள்ள கீரை வாய்க்கால் மதவைப் புனரமைத்துத் தருமாறு கமக்கார அமைப்பினர் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் விவசாய திணைக்களத்தினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் மறவன்புலோ கிராமத்தில் இடம்பெற்ற நெல் அறுவடை ஆரம்ப விழாவின் போதே கமக்கார அமைப்பின் உபதலைவர் தர்ஷன் மேற்படி கோரிக்கையை முன்வைத்திருந்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

மறவன்புலோ கிராமத்தில் விவசாயிகள் பல பிரச்சினைகளை எதிர் கொள்கின்றனர்.

அதில் முக்கியமான பிரச்சினையாக கீரைவாய்க்கால் மற்றும் மதவுப் புனரமைப்புக் காணப்படுகின்றது.

இந்த வாய்க்கால் ஊடாகவே மேலதிக வெள்ள நீர் கச்சாய் கடல் நீரேரியைச் சென்றடைகின்றது.

ஆனால் இந்த வாய்க்காலினுடைய மதவு அமைப்பு அதிகளவான நீர் வடிந்தோடக்கூடிய வகையில் இல்லை. இதனால் வயல்களில் வெள்ள நீர் தேங்கி பயிர்கள் வருடா வருடம் அழிவைச் சந்திக்கின்றன.

எனவே அதிகளவான நீரைக் கடத்தக்கூடிய விதத்தில் பாலம் அமைக்கப்பட வேண்டியது அவசியமானதொன்றாகக் காணப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக கடந்த காலங்களில் அதிகாரிகளிடம் தெரிவித்தும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

வடக்கு ஆளுநர் மற்றும் விவசாயத் திணைக்களத்தினர் மறவன்புலோ விவசாயிகளின் நலன்கருதி வாய்க்கால் மற்றும் மதவைப் புனரமைக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென மேலும் அவர் தெரிவித்திருந்தார்.








# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வில் 5 லட்சம் ரூபா பெறுமதியான உதவிகள்!

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வில் அருளுரை இடம்பெற்றது. அத்துடன் இறுதிச் சடங்குக்கான நிதி உதவி உட்பட 5 லட்சம் ரூபா பெறுமதியான உதவிகளும் வழங்கப்பட்டன.

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன தாஸ் சுவாமிகள் தலைமையில் ஆச்சி ரம மண்டபத்தில் நேற்று (24) வெள்ளிக் கிழமை இந்த நிகழ்வுகள் இடம் பெற்றக.

ஆன்மீக அருளுரையை “திருவைந் தெழுத்து” எனும் தலைப்பில் ஓய்வு நிலை சைவ சமய ஆசிரிய ஆலோசகர் திருமதி சிவனொளிபாதம் பரமேஸ்வரி நிகழ்த்தினார்.

ஆச்சிரமத்தின்உதவித் திட்டங் களாக, 97000 ரூபா பெறு மதியான 02 சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

ஆன்மீக,சமூகப்பணிகளுக்காகக் கரவெட்டியை சேர்ந்த நாகேந்திரராஜா வுக்கும் புத்தூர், நவக்கிரியை சேர்ந்த பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன் றுக்கு வாழ்வாதார தேவை கருதியும் இவை வழங்கப்பட்டன.

அல்வாய் இந்து தமிழ் கலவன் பாட சாலையின் கோரிக்கைக்கு அமைவாக, 120,000 ரூபா பெறுமதியான கலர் பிறிண்டர் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் - பழைய மாணவ சிப்பாய்கள் அமைப்பின் கோரிக்கைக்கு அமைவாக, நெடுந்தீவு பிரதேசத்தில் உள்ள 150 மாணவர்களுக்கு பயிற்சிப் பட்டறை நடத்துவதற்காக உணவுச் செலவுகளுக்கு 75,000 ரூபா நிதியும் வழங்கப்பட்டது.

மட்டக்களப்பு,கொக்கட்டிச்சோலை பிரதேசத்தை சேர்ந்த பல்கலைக்கழக சட்டத்துறை மாணவிக்கு மடிக்கணி னியும் யாழ்ப்பாண பல்கலைக்கழக வலிகாமம் மாணவர் ஒன்றியத்தால் கீரிமலை சிவாலயத்தில் இடம்பெறவுள்ள கலாச்சாரத்துடன் ஒன்றிணைந்த பொங்கல் விழாவுக்காக 25,000 ரூபா நிதியும் வழங்கப்பட்டன.

அத்துடன் நெடுங்கேணி, தண்டு வான் பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கு இறுதிச் சடங்கு சமய அனுஷ் டானங்களுக்கான செலவுகளுக்காக 25,000 ரூபா நிதியும் வழங்கப்பட்டது.

இந்த உதவித் திட்டங்களை ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் வழங்கி வைத்தார்.












# டெங்கு விழிப்புணர்வு ஆவணப்படம் யாழ். இந்துக் கல்லூரியில் வெளியீடு

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் அனுசரணையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஒளிப் படக்கலைக் கழகத்தின் தயாரிப்பு மற்றும் ஒளிப்படமாக்கலில் உருவான டெங்கு விழிப்புணர்வு தொடர்பான ஆவணக் குறும்படம் கடந்த 20 ஆம் திகதி திங்கட்கிழமை வெளியிட்டு வைக்கப்பட்டது.

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரின் ஏற்பாட்டில் யாழ். இந்துக் கல்லூரி சபாலிங்கம் அரங்கில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரும் சிறப்பு விருந்தினர்களாக செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் எல்.இளங்கோவன், வடமாகாண சுகாதார பணிப்பாளர் மருத்துவர் சமன் தர்மஸ்ரீ பத்திரன, யாழ். இந்தியத் துணைத் தூதரக அதிகாரி ரம்யா சந்திரசேகரன், யாழ். மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன், யாழ். இந்துக் கல்லூரி அதிபர் இ.செந்தில் மாறன், யாழ். மாநகர ஆணையாளர் எஸ். கிருஷ்ணேந்திரன், பொது மருத்துவ நிபுணர் த.பேரானந்தராஜா, வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ப.ஜெயராணி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் படத் தயாரிப்பு மற்றும் படப்பிடிப்பில் ஈடுபட்ட இந்துக் கல்லூரி ஒளிப்பட கழக மாணவர்களுக்கு பிரதம விருந்தினர் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவித்தார். அத்துடன் இந்துக் கல்லூரி ஒளிப்படக் கழகத்துக்கான கேடயமும் பிரதம விருந்தினரால் வழங்கி வைக்கப்பட்டது. இந்த ஆவணப் படத்தில் பங்குபற்றிய சுகாதாரத்துறை பணியாளர்கள் ஏனைய விருந்தினர்களால் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்த டெங்கு ஆவண குறும்படத்துக்காக முழுமையான ஒத்துழைப்பையும் ஆதரவையும் யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் த.தவரூபன் வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.













# நிறுத்தியிருந்த பட்டாவுடன் மோதிய வான் விபத்து!

## 6 பேர் வைத்தியசாலையில்

(எஸ்.கீதபொன்கலன்)

சேருவில – தங்கநகர் பகுதியில் நிறுத்தியிருந்த டிமோ பட்டா வாகனத்துடன் வான் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் 6 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ் விபத்து சம்பவம் நேற்று (24) மாலை இடம் பெற்றுள்ளது.

காத்தான்குடியில் இருந்து திருகோணமலை நோக்கி 10 பேருடன் பயணித்த வான் திருகோணமலை – மட்டக்களப்பு பிரதான வீதியின் தங்க நகர் பகுதியில் கட்டுப்பாட்டை இழந்து வீட்டுக்கு முன்னால் வீதி ஓரமாக தரித்து நின்ற டிமோ பட்டா வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் காயமுற்ற 2 குழந்தைகள், 3 பெண்கள் மற்றும் ஒரு ஆண் உள்ளிட்ட 6 பேர் சேருவில வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். குறித்த வானில் 2 குழந்தைகள், 6 பெண்கள், 2 ஆண்கள் பயணம் செய்திருந்தனர்.

சாரதியின் தூக்கமே விபத்துக்கான காரணம் என முதற்கட்ட விசாரணையில் தெரிய வருகின்றது. மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# சுகாதார விடயங்கள் சம்பந்தமான கலந்துரையாடல் சம்மாந்துறையில்

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறையில் சுகாதார விடயங்கள் சம்பந்தமான கலந்துரையாடல் டாக்டர் எம்.எம். நௌசாத் தலைமையில் இன்று (25) சனிக்கிழமை சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், வளவாளராக சமூக வைத்திய நிபுணர் டாக்டர் எம்.ஐ.எம்.ஹில்மி கலந்து கொண்டு தொற்றுநோய், தொற்றா நோய் போன்ற விடயங்கள் தொடர்பில் விரிவாக விளக்கினார்.

இதன் போது, சம்மாந்துறை வர்த்தக சம்மேளனத்தின் உறுப்பினர்கள், சம்மாந்துறை மஜ்லிஸ் அஷ்/றா உறுப்பினர்கள், சம்மாந்துறை ஜம்மியத்துல் உலமா சபை உறுப்பினர்கள் என பலராலும் பல விடயங்கள் பற்றி எடுத்துரைக்கப்பட்ட போது அதற்கான பதில்களும் வழங்கப்பட்டது. அத்துடன் சில சட்ட நடவடிக்கைகளும் எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு, முன்னாள் அமைச்சின் செயலாளரும் சம்மாந்துறை மஜ்லிஸ் அஷ்ஷுறா அமீர் எம்.ஐ. அமீர் மற்றும் உறுப்பினர்கள், சம்மாந்துறை ஜம்மியத்துல் உலமா



சபை தலைவர் மௌலவி எம்.எல்.எச். பசீர் மதனி மற்றும் உறுப்பினர்கள், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.என்.எம். பைலான், பொதுச் சுகாதார பரிசோதகர்களான எம்.ஐ.எம். ஹனீபா, எம்.டி. நசார், டி. தினேஸ், ஏ.எம். றம்சீன், டி. பரமேஸ்வரன்,ஏ.எம்.எஸ்.டி. அத்தநாயக்க, சம்மாந்துறை வர்த்தக சம்மேளன உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலுக்கு லயன்ஸ் கிளப் அனுசரணை வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிண்ணியா உதைப்பந்தாட்ட சம்மேளன தலைவராக ஜிகாத் ஆஷிக் தெரிவு

(எச் எம் ஹலால்தீன்)

கிண்ணியா உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவராக ஜிகாத் ஆஷிக் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இன்று (25) நடைபெற்ற கிண்ணியா உதைபந்தாட்ட சம்மேளனத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான தலைவர் போட்டியிலேயே இவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

கிண்ணியா மத்திய கல்லூரி அப்துல் மஜீத் மண்டபத்தில் நடைபெற்ற தலைவர்களுக்கான தெரிவிலேயே இவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். கிண்ணியா மத்திய கல்லூரியின் விளையாட்டு பயிற்றுவிப்பாளராகக் கடமை யாற்றிவரும் இவர் பல விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றி பெற்றுள்ளார். மாணவர்களதும் சமூகங்களதும் பொதுப் பணியிலும் சமூக சேவையிலும் ஈடுபாடு உடையவர்.



# திக்கம் வடிசாலையை மீள இயக்க உயர் அதிகாரிகள் முட்டுக்கட்டை!

## பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் சகாதேவன் குற்றச்சாட்டு

(த.சுபேசன்)

திக்கம் வடிசாலையை மீளவும் இயக்குவதற்கு அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட சில உயர் அதிகாரிகள் முட்டுக்கட்டையாக உள்ளனர் என்று பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் விநாயகமூர்த்தி சகாதேவன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு பனை அபிவிருத்திச் சபையின் புதிய தலைவரால் பணி நீக்கம் செய்யப்பட்ட சபையின் முன்னாள் பொது முகாமையாளரை மீள அதே பதவிக்கு இணைக்கும் அமைச்சின் செயலாளருடைய செயற்பாட்டைக் கண்டித்து சபையின் பணியாளர்கள் மற்றும் தென்னை, பனை வள அபிவிருத்திச்சங்கங்களின் அங்கத்தவர்கள் நேற்று (25) வெள்ளிக்கிழமை போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார். இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

பனை அபிவிருத்திச் சபையின் பணியாளர்கள் மற்றும் சங்க அங்கத்தவர்கள் போராட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

திக்கம் வடிசாலையை மீளவும் இயக்கும் எமது முயற்சிக்கு அமைச்சின் உயர் அதிகாரிகள் சிலர் முட்டுக்கட்டை போடுகின்றனர்.

திக்கம் வடிசாலையை மீள இயக்குவது தொடர்பாக அமைச்சரவைப் பத்திரத்தை தயார் செய்திருக்கும் நிலையிலேயே ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட பொது முகாமையாளரை மீள பணிக்கு அமர்த்தும் முயற்சி இடம்பெற்றுள்ளது.

நாம் எமது சபையில் கடந்த காலங்களில் நடந்த ஊழல்களையும் அதற்கு காரணமானவர்களையும் வடக்கு மாகாண ஆளுநர், மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர், பெருந்தோட்ட அமைச்சர் மற்றும் பெருந்தோட்ட பிரதி அமைச்சர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு சென்றிருந்தோம்.

என்னால் பணி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் பொது முகாமையாளர் திக்கம் வடிசாலையை இயங்கத் தடையாக இருந்தவர்.

அவர் சபையின் சில ஆவணங்களை மூன்று மாத காலமாக எமக்கு வழங்காமல் மறைத்து வைத்துள்ளார். சில ஆவணங்களை எரித்து அழித்ததாகவும் அவர் மீது குற்றச்சாட்டு உள்ளன. அவர் எமது பணிகளை செய்யவிடாமல் தடுத்துள்ளார்.

இந்தப் பொது முகாமையாளர் பணியாற்றிய காலத்தில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பாக லஞ்ச ஆணைக்குழுவில் இருந்து முறைப்பாடும் கிடைக்கப்பெற்றுள்ளது.

இவ்வாறு கடந்த காலத்தில் ஊழல்கள் செய்தவர்கள் தமது ஊழல்களை வெளிப்படுத்திய பணியாளர்கள் மீது நஷ்டஈடு கோரி வழக்கு தொடுத்துள்ளனர். உண்மையில் ஊழல் செய்தவர்களே பனை-தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும். ஊழல்வாதிகளைக் காப்பாற்ற உயர் அதிகாரிகள் அக்கறை காட்டுகின்றனர்.







நாம் ஊழல் செய்தவர்கள் மீது முன்வைத்த குற்றச்சாட்டுக்களுக்கு அமைச்சின் உயர் அதிகாரிகளால் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை. ஆனால் நாம் திக்கம் வடிசாலையை மீள இயக்க நடவடிக்கை எடுப்பது குற்றம் என்கின்றனர்.


லஞ்சம் கேட்ட அதிகாரிகள் மீது தென்னை, பனை வள கூட்டுறவுச் சங்கங்கள் கொடுத்த முறைப்பாட்டுக்கு இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை.

ஆனால் தவறு செய்யாமல் தவறை தட்டிக் கேட்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

பனை அபிவிருத்திச் சபையைச் சுரண்டி அதில் சுகபோகம் அனுபவித்தவர்களே தற்போதும் அமைச்சையும் அரசையும் தவறாக வழிநடத்த முயற்சிக்கின்றனர். அதற்கு ஒருபோதும் இடம்கொடுக்க முடியாது.

பனை அபிவிருத்திச் சபை பணியாளர்கள் மற்றும் சங்கங்களால் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டம் அரசுக்கு எதிரானது அல்ல.

ஊழல்வாதிகளை அரசு உடனடியாக தண்டிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே இந்தப் போராட்டம் முன்னெடுகப்பட்டுள்ளது.- என்றார்.



# திருமலை கிருஷ்ணன் ஆலய கும்பாபிஷேகம்!

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மடத்தடி ஸ்ரீ ருக்மணி தாயார், ஸ்ரீ சத்தியபாமா தாயார் சமேத ஸ்ரீ கிருஷ்ண பகவான் ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்ச குண்ட பக்ஷ மகா கும்பாபிஷேகம் எதிர் வரும் 3 ஆம் திகதி திங்கள்கிழமை நடைபெறவுள்ளது.கடந்த 7 ஆண்டு க ளுக்கு முன்னர் உற்சவ மூர்த்திகள் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு தற்போது நிர்மாணப்பணிகள்நிறைவு பெற்றுள்ளது.

27 ஆம் திகதி திங்கள்கிழமை கும்பாபிஷேக கர்மாரம்பம் ஆரம்பிக்கப்பட்டு, எதிர் வரும் முதலாம் திகதி முதல் 2 ஆம் திகதிவரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெறும்.

அதனை அடுத்து 3 ஆம் திகதி மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

# முல்லைத்தீவில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பாக ஆராய்வு





(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வடக்கு மாகாண சுற்றுலாத் துறைப் பணியகத்தின் நிதி அனுசரணையுடன் மேற்கொள் ளவுள்ள சுற்றுலாத்துறை அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

இதன்போது முல்லைத்தீவு நகரில் அமைந்துள்ள சின் னாறு பொழுது போக்குப் பூங்கா, முல்லைத்தீவு கடற்கரை பிரதேச அபிவிருத்தி, புளியமுனைக் கிராமத்தில் அமைய வுள்ள வடமாகாணத்தின் முதன்மையான சமூகம் சார்ந்த சுற்றுச் சூழல் சுற்றுலாத் திட்டம் மற்றும் கற்சிலைமடு பிரதேசத்தில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள பண்டார வன்னியன் ஞாபகார்த்த மணிமண்டபம் உள்பட்ட சுற்றுலாத் திட்டங்கள் அமைக்க எண்ணியுள்ள இடங்களை நேரில் பார்வையிட்டு விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ்வரன், வடக்கு மாகாண சுற்றுலாத் துறைப் பணியகத்தின் தலைவர் அ.பத்திநாதன், மாவட்ட மேலதிக அரச அதிபர். சி. குணபாலன், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர், உள்ளூ ராட்சி உதவி ஆணையாளர், கரைத்துறைப்பற்று பிரதேச சபைச் செயாளர், மாவட்டச் செயலக பிரதம அபிவிருத்தி உத்தியோகத்தர், திட்ட இணைப்பாளர், வடக்கு மாகாண சுற்றுலாத் துறைப் பணியகத்தின் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# தமிழ் காக்க உயிர்நீத்த மொழிப்போர் தியாகிகளுக்கு வீர வணக்கம்: விஜய்

தமிழ் காக்கக் களமாடி உயிர்நீத்த மொழிப்போர் தியாகிகளுக்கு வீர வணக்கம். உயிர்நீத்த தியாகிகளின் நினைவைப் போற்றி வணங்கி, நம் உயிரனைய, ஒப்பற்ற தாய்மொழி தமிழ் காக்க இந்நாளில் உறுதி ஏற்போம் என த.வெ.க. தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

மொழிப்போர் தியாகிகள் தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது. தமிழ் மொழி உரிமைகளுக்காகப் போராடி உயிர் நீத்த தியாகிகளுக்கு இன்று அஞ்சலி செலுத்தப்படுகிறது. இந்த



நிலையில் மொழிப்போர் தியாகிகளுக்கு அரசியல் கட்சி தலைவர்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக த.வெ.க. தலைவர் விஜய் தனது எக்ஸ் பக்கத்தில்,

"உலகில், தன் தாய்மொழி காக்க, தன்னெழுச்சியுடன் போராடிக்கொண்டே இருக்கும் இனம், தமிழினம். தமிழ் காக்கக் களமாடி உயிர்நீத்த மொழிப்போர் தியாகிகளுக்கு வீர வணக்கம்.உயிர்நீத்த தியாகிகளின் நினைவைப் போற்றி வணங்கி, நம் உயிரனைய, ஒப்பற்ற தாய்மொழி தமிழ் காக்க இந்நாளில் உறுதி ஏற்போம். தமிழ் வாழ்க." என்று குறிப்பிட்டுள்ளார்.

# கஞ்சாச் செடிகளை வளர்ப்பதற்கு இமாச்சல் அமைச்சரவை ஒப்புதல்

கடந்தாண்டு இந்தியா முழுவதும் சட்டவிரோதமாக கஞ்சா செடிகள் வளர்த்த விவகாரத்தில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனிடையே இளைஞர்களிடையே கஞ்சா பயன்பாடு அதிகரித்து வருவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், இமாச்சலப் பிரதேச அரசு கஞ்சா செடியை வளர்க்க அனுமதி வழங்கியுள்ளது. அதாவது தொழில், அறிவியல் மற்றும் மருத்துவ ஆராய்ச்சி நோக்கங்களுக்காக, கட்டுப்பாடுகளுடன் கஞ்சாவை வளர்க்க இமாச்சலப் பிரதேச அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.



காங்க்ரா மாவட்டத்தில் உள்ள தர்மசாலாவில் முதலமைச்சர் சுக்விந்தர் சிங் சுகு தலைமையில் நடைபெற்ற மாநில அமைச்சரவை கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. எனினும் பொதுமக்களுக்கு இந்த அனுமதி பொருந்தாது என அரசு சார்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

# மும்பை தாக்குதல் குற்றவாளி ராணாவை இந்தியாவுக்கு நாடு கடத்த அமெரிக்கா சம்மதம்

மும்பை தாக்குதல் வழக்கு குற்றவாளி தஹவ்வூர் ராணா இந்தியாவுக்கு நாடு கடத்த அமெரிக்க உச்ச நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது. ராணாவை நாடு கடத்த இந்தியா கோரியுள்ள காரணங்களில் முகாந்தரம் உள்ளதால் அவரை நாடு கடத்த உச்ச நீதிமன்றம் சம்மதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2008 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி கடல் வழியாக மும்பைக்குள் புகுந்த லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

உலகையே உலுக்கிய இந்த தாக்குதலில் 166 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். இதில் 6 அமெரிக்கர்களும் அடங்குவர்.மேலும் 300 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர். இந்த தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதி அஜ்மல் கசாப் மட்டும் பொலிஸாரால் உயிரோடு பிடிக்கப்பட்டார். பின்னர் அவர் தூக்கிலிடப்பட்டார்.

இந்நிலையில் மும்பை தாக்குதலில் தொடர்புடைய பாகிஸ்தானை பூர்வீகமாக கொண்ட தீவிரவாதி தஹவ்வூர் ஹுசைன் ராணா அமெரிக்காவில் கடந்த 2009 இல் பிடிபட்டார். மும்பை தாக்குதல் விவகாரத்தில் பாகிஸ்தான் தீவிரவாதி டேவிட் ஹெட்லியுடன் சேர்ந்து, கனடா குடியுரிமை பெற்ற பாகிஸ்தான் தொழில் அதிபர் ராணா சதித்திட்டம் தீட்டியுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலில் முக்கிய குற்றவாளியாக சந்தேகிக்கப்படுபவர் தஹவ்வூர் ராணா. அமெரிக்க சிறையில் உள்ள ராணாவை இந்தியாவுக்கு கொண்டு வந்து விசாரணை நடத்த இராஜதந்திர ரீதியில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்தன. இந்தியாவின் கோரிக்கைக்கு அமெரிக்க அரசும் ஆதரவு தெரிவித்திருந்தது. இந்நிலையில், அமெரிக்க உச்ச நீதிமன்றம் இன்று இதற்கான ஒப்புதலை வழங்கியுள்ளது.



முன்னதாக, ராணா தன்னை இந்தியாவுக்கு நாடு கடத்துவதை தடுக்க கோரி சான்பிரான்சிஸ்கோவில் உள்ள கீழமை நீதிமன்றங்களை நாடினார். ஆனால், அவரிக் கோரிக்கையை ஏற்க அவை மறுத்துவிட்டன. இந்த நிலையில், இறுதி முயற்சியாக அவர் உச்ச நீதிமன்றத்தை நாடினார். ஆனால் அவரின் கோரிக்கையை ஏற்க கூடாது என தற்போது அமெரிக்க அரசே பதில் மனு தாக்கல் செய்தது.

அமெரிக்க அரசின் கோரிக்கையை ஏற்று உச்ச நீதிமன்றம் ராணாவின் நாடு கடத்துவதை தடுக்க கோரும் மனுவை தள்ளுபடி செய்துள்ளது. குற்றவாளிகளை பரஸ்பரம் ஒப்படைக்கும் ஒப்பந்தம் அமெரிக்கா மற்றும் இந்தியா இடையே ஏற்கெனவே அமலில் உள்ள நிலையில், அதன் அடிப்படையில் ராணா நாடு கடத்தப்படுகிறார். ராணா விரைவில் இந்தியாவுக்கு கொண்டு வரப்பட்டு விசாரிக்கப்பட வாய்ப்புள்ளது.




# காற்று மாசுபாடு அதிகரிப்பு: 352 பாடசாலைகளுக்கு பூட்டு

உலகின் சமீபத்திய மிகப்பெரும் பிரச்சனையாக காலநிலை மாற்றம் உருவெடுத்துள்ளது. இதன் விளைவாக உலகம் வெப்பமயமாதல், கடல் நீர் மட்டம் உயர்வு, அதீத கனமழை மற்றும் வறட்சி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

மேலும் ஆங்காங்கே காட்டுத்தீயும் எரிந்து வருவதால் காற்று மாசுபாடு பல மடங்கு அதிகரித்துள்ளது. அந்த வகையில் தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் காற்றின் தரம் மிகவும் மோசமடைந்தது.

இதற்கிடையே ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கையின்படி உலகின் காற்று மாசுபாடு அடைந்த நகரங்கள் பட்டியலில் தாய்லாந்து தலைநகர் பாங்காக் 7 ஆவது இடத்தை பிடித்தது. அண்டை நாடான வியட்நாம், கம்போடியாவில் உள்ள நகரங்களும் முதல் 10 இடங்களைப் பிடித்துள்ளன. இதன் காரணமாக அங்கு வசிப்பவர்கள் மோசமான காற்றை சுவாசிப்பதால் நுரையீரல் புற்றுநோய் போன்ற பல்வேறு நோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளது. இதனை கட்டுப்படுத்த அரசாங்கம் பல்வேறு நடவடிக்கை எடுத்து வருகிறது. அதன்படி காற்று மாசுபாட்டுக்கு முக்கிய காரணமாக கருதப்படும் விவசாய கழிவுகளை எரிக்க தாய்லாந்தில் தடை விதிக்கப்பட்டு உள்ளது. இதனை மீறுபவர்கள் கைது செய்யப்படுவார்கள் என உள்துறை அமைச்சர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதேபோல் மாணவர்களின் நலன் கருதி தலைநகர் பாங்காக்கில் 352 பாடசாலைகள் மூடப்பட்டு உள்ளன. மேலும் தங்களது ஊழியர்களை வீட்டில் இருந்தே பணிபுரிய அனுமதிக்கும்படி தனியார் நிறுவனங்களுக்கு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

அதேபோல் தலைநகர் பாங்காக்கில் கனரக வாகனங்களை ஓட்டுவதற்கு தடை விதிக்கப்பட்டு உள்ளது. இதனை தொடர்ந்து காற்று மாசுபாட்டை குறைக்க அனைவரும் பொதுபோக்குவரத்தை பயன்படுத்துமாறு அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது. இதற்காக அடுத்த ஒரு வாரத்துக்கு பஸ், ரெயில் போன்றவற்றில் இலவசமாக பயணம் செய்ய போக்குவரத்து அமைச்சகம் அனுமதி வழங்கி உள்ளது.

# தென் சீனக் கடலில் ஆய்வை நிறுத்தியது பிலிப்பைன்ஸ்



தென் சீனக் கடலில் முன்னெடுத்து வரும் அறிவியல் ஆய்வை பிலிப்பைன்ஸ் நிறுத்தி வைத்துள்ளது.

சீன கடலோர காவல்படை மற்றும் கடற்படையால் பிலிப்பைன்ஸ் கப்பல்கள் துன்புறுத்தப்பட்டதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பிலிப்பைன்ஸ் தெரிவித்துள்ளது.

தென் சீனக் கடலில் அண்டை நாடுகளுக்கு இடையே கருத்து மோதல் நிலவி வருவதாகவும், அது தற்போது தீவிரமடைந்துள்ளதாகவும் வெளிநாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இன்று விடுவிக்கப்படவுள்ள பணயக் கைதிகளின் பெயர் விவரங்களை அறிவித்தது ஹமாஸ் தரப்பு



காசா போர் நிறுத்த ஒப்பந்தத்தின் கீழ் இன்றைய தினம் விடுவிக்கப்படவுள்ள நான்கு பணயக் கைதிகளின் பெயர்கள் ஹமாஸ் தரப்பிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, நான்கு பெண்கள் இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு ஈடாக இஸ்ரேலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 180 பாலஸ்தீன கைதிகள் இன்று விடுவிக்கப்படுவார்கள்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை முதல் அமுலுக்கு வந்துள்ள போர் நிறுத்தத்தின் கீழ் இன்றைய தினம் இரண்டாவது முறையாகக் கைதிகள் பரிமாற்றம் இடம்பெறவுள்ளது.

முதலாவது பரிமாற்றத்தின் போது 3 பணயக் கைதிகள் விடுவிக்கப்பட்டதுடன் 90 பாலஸ்தீனிய கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை, அடுத்த 5 வாரங்களில் விடுவிக்கப்படவுள்ள மீதமுள்ள 26 பணயக் கைதிகள் பற்றிய தகவல்களையும் ஹமாஸ் வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பக்கங்கள் 03

கனடா முரசு

சனிக்கிழமை 25/01/2025

## பெண் மீது துப்பாக்கிச் சூடு; பொலிஸார் தீவிர விசாரணை

கனடாவின் மார்க்கம் பகுதியில் பெண் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வீட்டிலிருந்த பெண் 02



# கனடாவில் ஆயுத முனையில் வாகன கொள்ளை முயற்சி

**கனடாவில் ஆயுதமுனையில் வாகனம் ஒன்றை மூன்று சிறுவர்கள் கொள்ளையிட முயற்சித்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.**

**நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தை கொள்ளையிட முயற்சிக்கப்பட்டுள்ளது.**

**துப்பாக்கி ஒன்றை காண்பித்து அச்சுறுத்தி வாகனம் கொள்ளையிட முயற்சிக்கப்பட்டுள்ளது.**

துப்பாக்கியை காண்பித்து வாகன சாவியை வழங்குமாறு அச்சுறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் இந்த சம்பவத்தின் போது வாகனத்தின் சாரதி சாவியை சந்தேக நபர்களிடம் வழங்காது அதனை தூக்கி வீசி எறிந்துள்ளார்.

இதன் போது சந்தேக நபர்கள் பாதிக்கப்பட்டவரை தாக்கி அவருடைய தொலைபேசியை பறித்து சென்றுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

# பெண்களை துஷ்பிரயோகம் செய்தவருக்கு 25 ஆண்டுகால சிறைத் தண்டனை விதிப்பு

கனடாவில் பெண்களை துஷ்பிரயோகம் செய்த நபர் ஒருவருக்கு நீதிமன்றம் 25 ஆண்டுகால சிறை தண்டனை விதித்துள்ளது.

கனடாவின் மொன்றியல் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சில பெண்களை பாலியல் ரீதியாக துன்புறுத்தினார் எனவும் துஷ்பியோகங்களை காணொலியாக பதிவு செய்தார் என்றும் சந்தேக நபர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இணைய வழியில் தொடர்புகளை ஏற்படுத்தி இவ்வாறு மேற்படி நபர் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டார் என தெரிவிக்கப்படுகிறது. 02

இந்த தண்டனை கால முடிந்ததன் பின்னரும் பத்து ஆண்டுகள் மேற்படி நபர் தீவிரமாக கண்காணிக்கப்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டு 30 வயதான சமுவெல் மொடிரி என்ற நபரை பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இந்த சந்தேக நபர் 13 பெண்களுக்கு மேல் துன்புறுத்தியுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர் சுமார் 24 பாலியல் குற்றச்செயல்களில் ஈடுபட்டார் என நீதிமன்றில் ஒப்புக் கொண்டுள்ளார்.

இதன் அடிப்படையில் மேற்படி நபருக்கான தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.






# கனடாவின் எல்லைக்குள் பிரவேசித்த அமெரிக்க குடியேற்றவாசிகள் கைது

கனடாவின் எல்லைக்குள் பிரவேசித்த ஆறு சட்டவிரோத அமெரிக்க குடியேற்றவாசிகளை கனேடிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேற்படி ஆறு பேரும் கடுமையான குளிரான காலநிலையிலும் நடந்தே எல்லையை கடந்துள்ளனர் என அந்நாட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எமர்சன் பகுதிக்கு அருகே நடந்தே எல்லையை கடக்கும் சிலரை கனேடிய அதிகாரிகள் விமானம் மூலம் பார்வையிட்டுள்ள நிலையில் அவர்களை மீட்டுள்ளதாக கூறியுள்ளனர்.

இதன்போது, மீட்கப்பட்ட குடியேற்றவாசிகளில் சிலர் உறைபனி வெப்ப நிலைக்கு ஏற்றவாறான ஆடைகளை அணியவில்லை என்றும் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக நோயாளர் காவு வண்டிகள் அழைக்கப்பட்டன எனவும் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றதையடுத்து, சட்டவிரோத குடியேற்றம் மற்றும் போதைப்பொருள் கடத்தலை தடுக்க கனடாவுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

அத்துடன், அவர் தனது கோரிக்கைகளுக்கு ஏற்றவாறான வகையில் வரிகளை விதிக்கப்போவதாகவும் எச்சரித்திருந்தார்.

இதனை தொடர்ந்து, கனடா ட்ரம்பின் இக்கருத்துக்கு பதிலளிக்கும் வகையில், 1.3 பில்லியன் டொலர் பெறுமதியான தனது, வான்வழி பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரித்தது.

இந்நிலையில், பல நாடுகளை சேர்ந்த ஏனைய சட்டவிரோத குடியேற்றவாசிகளையும் அமெரிக்காவை சேர்ந்த ஆறு பேரையும் கைது செய்துள்ளதாக கனடா அறிவித்துள்ளது.









## பெண் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பான காணொளி வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி துப்பாக்கிதாரி பெண்ணிடம் பேசிக் கொண்டிருந்துள்ளார் எனவும் பின்னர் அந்தப் பெண் வீட்டை நோக்கி நடந்த போது பின்னால் சென்று துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

துப்பாக்கிச் சூட்டில் பெண்ணுக்கு உயிராபத்து ஏற்படுத்தும் காயங்கள் இல்லை என தெரிவிக்கப்படுகின்றது.



# கனடாவில் சர்வதேச மாணவர்களின் விண்ணப்ப எண்ணிக்கையில் வீழ்ச்சி

கனடாவில் சர்வதேச மாணவர்களுக்கான விண்ணப்ப எண்ணிக்கையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் இந்தநிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்றாரியோவில் கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இந்த ஆண்டில் சர்வதேச மாணவர்களுக்கான விண்ணப்பங்கள் 23 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2024 ஆம் ஆண்டில் 23, 5000 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றன எனவும் இந்த ஆண்டில் 181,500 விண்ணப்பங்களே கிடைக்கப் பெற்றுள்ளன என்றும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

மாணவர் வீசா எண்ணிக்கை இந்த ஆண்டிலும் அடுத்த ஆண்டிலும் மேலும் குறைக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மத்திய அரசாங்கம் சர்வதேச மாணவர் எண்ணிக்கையை குறைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# கனடாவின் எரிபொருள் தேவையில்லை: டொனால்ட் ட்ரம்பின் அதிரடி அறிவிப்பு

கனடாவின் எரிபொருள் தேவையில்லை என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சுவிட்சர்லாந்தில் நடைபெற்று வரும் உலக பொருளாதார மாநாட்டில் காணொளி தொழில்நுட்பம் மூலம் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில், கனடாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் எண்ணெய், எரிவாயு மற்றும் வாகனங்கள் போன்ற எதுவுமே தேவையில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

கனடாவுடன் செயல்படுவது மிகுந்த சவால் மிக்கது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எங்களது கார்களை கனடியர்கள் உற்பத்தி செய்ய வேண்டிய அவசியம் இல்லை என தெரிவித்த அவர் கனடாவை விடவும் உலகில் ஏனைய நாடுகளை விடவும் அமெரிக்காவிடம் கூடுதல் எண்ணிக்கையில் எரிபொருள்கள் காணப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

25 வீத வரியிலிருந்து தப்பிக்க வேண்டுமானால் அமெரிக்காவுடன் கனடா இணைந்து கொள்ள வேண்டும் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

மேலும், அவ்வாறு செய்யத் தவறினால் வரி விதிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.